மனைப்பிரிவு வரைபடம்
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்
திருநெல்வேலி உள்ளூர் திட்டக்குழுமம்


திருநெல்வேலி மாவட்டம்

பாளையங்கோட்டை தாலுகா, பாளையங்கோட்டை ஊராட்சி ஒன்றியம்,

நொச்சிகுளம் ஊராட்சி, பற்பகுளம் கிராமம்,

சர்வே எண்: 35/2ஏ – இல் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவின் தொழில் நுட்ப ஒப்புதல் வரைபடம்.

Online Application No: 8YNNK516 அளவு: 1 : 800



குறிப்பு:–

மனைப்பிரிவு இடத்தின் பரப்பளவு	-	9200.00ச.மீ (2.27 ஏக்கர்)
உத்தேச மனைப்பிரிவு சாலையின் மற்றும் மூலை முடக்குகளின் பரப்பளவு	-	2563.57ச.மீ
மீதமுள்ள பரப்பளவு	-	6636.43ச.மீ
கோரிய மனைகள்	–	43
ஒதுக்கிய மனைகள்	–	42
மனைப்பிரிவு இடத்தின் எல்லை		
நிலையில் உள்ள சாலை		

பொது ஒதுக்கீடுகள் :–

(உள்ளாட்சிக்கு தான பத்திரம் எண்: 3834 / 2023, நாள்: 17.10.2023, மூலம் ஒப்படைப்பு செய்யப்பட்டவை)

உத்தேச மனைப்பிரிவு சாலை மற்றும் மூலை முடக்கு	–	2563.57ச.மீ
PUBLIC PURPOSE (B) ஒதுக்கீடு	–	35.09ச.மீ (0.52%)
நிலவியல் ஓடை – 1	–	150.45ச.மீ
நிலவியல் ஓடை – 2	–	160.65ச.மீ

(TANGEDCO- க்கு தான பத்திரம் எண்: 3888 / 2023, நாள்: 19.10.2023, மூலம் ஒப்படைப்பு செய்யப்பட்டவை)

TANGEDCO (A) ஒதுக்கீடு	–	33.27ச.மீ (0.50%)

பூங்காவிற்கு **TNCDBR-2019** விதி 47 (6) படி 665.00ச.மீ க்கு அரசு வழிகாட்டுதல் மதிப்பின்படி ரூ.46,454/- நாள்: 11.11.2023 ல் உரிய அரசு கணக்கு தலைப்பில் செலுத்தப்பட்டுள்ளது

மூலை முடக்கு – 7.20மீ, 9.0மீ மற்றும் 10.0மீ அகல சாலைக்கு 1.50மீ X 1.50மீ

நிபந்தனைகள்:

1. அரசாணை நிலை எண் : 71 ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி துறை நாள்:16.08.2003–ன் படி நில உரிமம் குறித்து நொச்சிகுளம் ஊராட்சி தலைவர் உறுதி செய்துகொள்ள வேண்டும்.
2. அரசாணை நிலை எண் : 181 மற்றும் 144 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை நாள்:09.12.2020 மற்றும் 16.07.2022–ன் படி. தலைவர் நொச்சிகுளம் ஊராட்சி தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும். மேலும் சாலைகள் மற்றும் பொது உபயோகம் நிலையப்பினை நொச்சிகுளம் ஊராட்சிக்கு தானப்பத்திரம் மூலம் ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளதனை உள்ளாட்சி பெயருக்கு வருவாய் உட்பிரிவு செய்தும், மனுதாரரால் தார்சாலை அமைக்கப்பட்ட பின்னரே உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.
3. இம்மனைப்பிரிவுக்கு இறுதி ஒப்புதல் வழங்கும்முன் நில ஆஜிதம் ஏதும் இல்லை எனவும், எந்தத் துறையாலும் நில ஆஜித நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றும், மற்றும் நில ஆஜிதம் செய்து தரக்கோரி மாவட்ட வருவாய் அலுவலரிடமிருந்து உத்தேசங்கள் ஏதும் பெறப்படவில்லை என்றும் தலைவர் நொச்சிகுளம் ஊராட்சி உறுதி செய்து கொள்ள வேண்டும்.
4. நில உரிமம் குறித்து சமர்பிக்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையில்ல என அறியப்பட்டால் அல்லது மனைப்பிரிவிற்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின், மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட தொழில்நுட்ப ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பும் இல்லாமல் ரத்து செய்யப்படும்.
5. மனைப்பிரிவின் உட்பே செல்லும் குறைந்த மின்அழுத்த கம்பி பாதையினை சாலையின் போக்கிற்கு ஏற்றவாறு மனுதாரர் தன் சொந்த செலவில் மாற்றி அமைக்க வேண்டும்

ம.வ/தி.உ திகு எண் – SWP/73 /2023
தி.அ/ம.வ/தி.உ திகு எண் – SWP /121/ 2023

உறுப்பினர் செயலர் /இணை இயக்குநர்
திருநெல்வேலி உள்ளூர் திட்டக்குழுமம்
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்
திருநெல்வேலி மாவட்டம்

Signature valid
Signed by: Joint Director
Location: Tirunelveli
Date: 2023.11.21

Signature valid
Signed by: Village Panchayat President
Location: Tirunelveli
Date: 2023.07.25